Exploration of oil in Tamil Nadu

* 219 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the **Minister for Industries be pleased to state whether any Russian** team of Geologists are undertaking survey of the Cauvery delta area **to unearth oil in this State?**

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

ஆனால், காவிரி கயவாய்ப் பகுதியில் (Cauvery Delta) **எண்ணெய் எரி வாயு ஆணைக்குழுவினால் நடத்தப்பட்டு வரும்** துளையிடும் பணிகளுக்கு சோவியத் நாட்டின் சில வல்லுநர்களும் **தொழில் நுட்பப்பணியார்களும் உதவி புரிந்து வந்துள்ளார்கள்.**

* 220 வினா—திரு. எஸ். அக்னிராஜு : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-1969-ல் மத்திய அரசு எண்ணெய் எரிவாயு கமிஷன் **தமிழ் நாட்டில் பெட்ரோலிய ஆராய்ச்சி நடத்திய இடங்கள் எத்தனை?**

(இ) எந்தெந்த இடங்களில் பெட்ரோலியம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) எண்ணெய்—எரி வாயு ஆணைக்குழுவினால் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலக்கூறு இயற்பியல், புவியியல் ஆய்வுகள் நடத்தப்பட்டு வந்துள்ளன. காரைக்கால், திருப்பூண்டி, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம், மடானம் பகுதிகளில் ஆழமான ஆய்வுக் கிணறுகளும் (Exploratory Wells), கந்தர்வக் கோட்டை, தஞ்சாவூர், கும்பகோணம், மன்னார்குடி, நாக்குடி, காரைக்குடி, பாண்டிக்கண்மாய் பகுதிகளில் கட்டுமானக் கிணறுகளும் (Structural wells) தோண்டும் பணி முடிவடைந்துள்ளது. இவ்வாண்டில் திருத்துறைப்பூண்டி அருகில் மேலும், ஒரு கிணறு தோண்டுவதற்கு எண்ணெய்—எரிவாயு ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

(இ) இதுவரை தோண்டப்பட்ட கிணறுகள் எதிலும் வாணிக முக்கியத்துவம் வாய்ந்த ஹைட்ரோகார்பன் (Hydro-carbon இருப்பதற்கான அறிகுறிகள் கிடைக்கப்பெறவில்லை என்று எண்ணெய்-எரிவாயு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : காவேரி டெல்டா பகுதியில் நடத்தப்பட்ட சோதனைகளின் விளைவாக எங்கெங்கே என்ன என்ன **எண்ணெய், எரிவாயு முதலியன கிடைக்கின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டது? அவற்றை எடுக்க மொத்தம் எவ்வளவு செலவாகும் என்று அரசாங்கம் கருதுகிறது?**